DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 128/2024 Crime No. 451/2024 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW2- சகுந்தலா | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 22.04.2025 |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை-**

நான் காடப்பநல்லூரில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது கணவரின் இரண்டாம் மனைவி ஆவார். தேதி மற்றும் மாதம் நினைவில்லை, கடந்த 1 வருடத்திற்கு முன்பு ஒருநாள் மாலை சுமார் 04.00 மணியளவில், எனது மகள் அ.சா.1 எனது வீட்டிலிருந்தபோது எதிரியும், அ.சா.1 ம் சொத்து குறித்து ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது எதிரி, அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் பேசி தனது கையில் வைத்திருந்த தட்டால் அ.சா.1 ன் மண்டையில் ஓங்கி அடித்துவிட்டார். அப்போது எதிரியின் மகள் அ.சா.1 ஐ குத்துவதற்காக கம்பியை எடுத்துக் கொண்டு வந்தார். அதனை நானும், எனது தம்பி வெங்கடேசும் தடுத்துவிட்டோம். பின்னர் நானும், எனது தம்பியும், எனது மகளை அங்கிருந்து அழைத்து சென்று விட்டோம், அப்போது எதிரியும், அவரது மகளும் எனது மகளை பின்னால் துரத்திக் கொண்டு வந்தார்கள். பின்னர் எனது மகள் காவல் நிலையம் சென்று புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது கணவருடன் இல்லை என்றால், சரிதான். நான் எனது மகள் பழனியம்மாளுடன் முத்துக்கவுண்டன்புதூரில் குடியிருந்து வருகிறேன் என்றால், சரிதான். எனது வீட்டிற்கும், எதிரியின் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், சுமார் ½ மீ தூரம் இருக்கும். எனது தம்பி வெங்கடேஷ் நெரிஞ்சிப்பேட்டையில் குடியிருக்கிறார் என்றால், சரிதான். சம்பவதன்று நான் எனது கணவர் வசிக்கும் முத்துக்கவுண்டன்புதூருக்கு சென்றேன் என்றால், சென்றேன். அங்கு சொத்து சம்பந்தமாக பேசும்போதுதான் தகராறு ஆரம்பித்தது என்றால், சரிதான். சொத்துக்கள் அனைத்தையும் எனது மாமானார் மற்றும் மாமியார் எனது கணவருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துவிட்டார்கள் என்றால், சரிதான்.

எதிரியின் மகள் கம்பியை எடுத்து அ.சா.1 ஐ குத்து வந்தபோது நாங்கள் தடுத்தோம் என்றும் அதன் பின்னிட்டு எனது மகளை அழைத்துக் கொண்டு செல்லும்போது எதிரியும், அவரது மகளும் பின்னால் துரத்தி வந்தார்கள் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால், சொல்லவில்லை. 06.08.2024 ம் தேதியன்று இரவு சுமார் 01.00 மணியளவில் சம்பவம் நடைபெற்றது என்று போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால், சரிதான். நான்

சொல்வதுபோல் எதிரியும், எதிரியின் மகளும் எவ்வித தகராறும் செய்யவில்லை என்றும் சொத்திற்காக நீங்கள்தான் எதிரி குடியிருக்கும் வீட்டிற்கு சென்று தகராறு செய்தும், அதிலிருந்து தப்பிக்க தானாகவே காயத்தை ஏற்படுத்திக் கொண்டு எதிரி மீதும் எதிரியன் மகள் மீதும் பொய்யான புகார் கொடுத்துள்ளோம் என்று சொன்னால், சரியல்ல. அ.சா.1 எனது மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 128/2024 Crime No. 451/2024 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW1- மீனாட்சி | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 22.04.2025 |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை-**

நான் ஆனந்தம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், அவர் எனது சித்தி ஆவார். தேதி மற்றும் மாதம் நினைவில்லை, கடந்த 1 வருடத்திற்கு முன்பு ஒருநாள் பகல் சுமார் 01.00 மணியளவில், முத்துக்கவுண்டன்புதூரிலுள்ள எனது அப்பா வீட்டிற்கு நான் சென்றிருந்தேன். அப்போது சுமார் 04.00 மணியளவில் எனது அப்பாவின் இரண்டாம் மனைவியான ஆஜர் எதிரி மற்றும் அவரது மகள் ஆகியோர்கள் என்னிடம் என்ன நீ இங்கு சொத்திற்கா வந்த என்று கூறி என்னை தகாத வார்த்தைகளால் பேசினார். அப்போது எதிரி கையில் வைத்திருந்த சாப்பாட்டு தட்டால் எனது மண்டையில் ஓங்கி அடித்துவிட்டார். அவரது மகள் இரும்பு ராடால் என்னை அடித்தார். அப்போது அங்கு வந்த எனது மாமா வெங்கடேஷ் என்னை விலக்காட்டி அங்கிருந்து அழைத்து சென்றுவிட்டார். வலி அதிமாக இருந்ததால் மறுநாள் காலையில் நான் எனது மகளின் உதவியுடன் பவானி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி எனது தகப்பனாருக்கு இரண்டாவது மனைவி என்றால், சரிதான். நான் குடியிருக்கும் ஆனந்தம்பாளையத்திற்கும், காடப்பநல்லூருக்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால், சுமார் 3 கி மீ இருக்கும். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதிவரை எனக்கும், என் அப்பாவிற்கும் எவ்வித போக்குவரத்தும் இல்லை என்றால், சரியல்ல. எனது அப்பாவின் இரண்டாவது திருமணத்திற்கு பின்னிட்டு உங்களுக்கும் உங்கள் தகப்பனாருக்கும் எவ்வித போக்குவரத்தும் இல்லை என்றால், சரியல்ல.

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவத்தன்று எதிரி என்னை தட்டால் 04.00 மணியளவில் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். இந்த புகாரை நான் எழுதவில்லை என்றால், நான்தான் எழுதினேன். நான் பவானி மருத்துவமனையில் அனுமதித்தபோது மருத்துவர் என்னை

யார் அடித்தார்கள், எத்தன் நபர்கள் அடித்தார்கள் என்ற விவரத்தை கூறினேனா என்றால், கூறினேன். நான் மருத்துவரிடம் ஒரு ஆண் மற்றும் இரண்டு பெண்கள் அடித்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால், சரியல்ல. இரண்டு பெண்கள் அடித்தார்கள் என்று கூறினேன்.

நான் கொடுத்த புகாரில் 05.08.2024 ம் தேதியன்று, மாலை 04.00 மணிக்கு எங்கள் ஊர் ஆனந்தம்பாளையத்திலிருந்து என் அப்பாவை பார்க்க காடப்பநல்லூர் முத்துக்கவுண்டன்புதூர் சென்று உடல்நிலை சரியில்லாத எனது அப்பாவை பார்த்துவிட்டு அங்கு இருந்தேன் என்று சொன்னால், சரிதான். எனது தகப்பனார் வீட்டில் நான் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால், சுமார் 4-5 மணி நேரம் இருக்கும். அதன் பின்னிட்டு எங்கள் ஊர் ஆனந்தம்பாளையத்திற்கு சென்று விட்டேன் என்றால், சரிதான். எனது தாத்தாவும் பாட்டியும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட 4 ஏக்கர் சொத்தை எனது தகப்பானருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார்கள் என்றால், சரிதான்.

என்னுடன் உடன் பிறந்தவர்கள் 3 பெண்கள் மற்றும் ஒரு ஆண் ஆவார்கள். அந்த ஆண் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால், சரிதான். எதிரியை எனது அப்பா திருமணம் செய்தது பின்னிட்டு 3 வாரிசுகள் உள்ளது என்றால், சரிதான். மேற்படி சொத்தை எனது அப்பா எதிரியின் மகனுக்கு எழுதி வைத்துவிடுவார் என்பதற்காக நீங்கள் அங்கு சென்று தகராறு செய்தீர்கள் என்றால், சரியல்ல. எதிரியை எங்கள் வழிக்கு கொண்டு வருவதற்காக நானாகவே ஒரு காயத்தை ஏற்படுத்திக் கொண்டு எதிரி மீதும் அவர் மகள் மீதும் பொய் புகார் அளிக்கப்பட்டது என்றால், சரியல்ல. 05.08.2024 ம் தேதியன்று மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால், அன்றைய தினம் எனக்கு உடல்நிலை முடியவில்லை, அதனால் மறுநாள் சென்றேன். நான் கொடுத்த புகாரில் முந்தைய நாள் ஏன் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்ற காரணத்தை கூறவில்லை என்றால், சரிதான்.

என்னுடைய குவிமுச 161 ல் இரவு 01.00 மணிக்கு சம்பவம் நடந்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால், சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னை தட்டால் தாக்கினார் என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. சம்பவம் நடந்தது உண்மை என்றால், தேதி மற்றும் நாள் ஆகியவற்றை முன்னுக்கு பின்னாக கூறமாட்டேன் என்றால், சரியல்ல.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.